எஸ்.டி.சி. 213/2022 பு.சா.2 பாபு த/பெ.கொக்கரையா வயது 69 14.03.2024.

(எதிரி ஆஜர்.)

சாட்சி அழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

புகார்தாரர் எவ்வழியில் எனக்கு உறவு என்றால் எனது மகனின் நண்பர் ஆவார். எனக்கு எவ்வளவு ஆண்டுகளாக புகார்தாரர் தெரியும் என்றால் என் மகனுடன் அவர் படித்தவர். பிப்ரவரி 2022ம் தேதி எதிரிக்கு புகார்தாரர் ரூ.1,00,000 கொடுத்தார். ரூ.1,00,000 கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும், நான்தான் எதிரியை புகார்தாரரின் வீட்டிற்கு அழைத்து சென்று கடன் வாங்கி கொடுத்தேன். நான் மேற்படி சொன்ன விவரத்தை தான் என்னுடைய ஆணையுறுதி மொழியிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அதை தவிர வேறேதேனும் இருந்தால் அது என்னுடைய ஆணையுறுதி மொழி இல்லை என்றால் சரிதான்.

எதிரி வீடு கட்டுவதாகவும் வங்கியில் கேட்ட கடன் கிடைக்கவில்லை என்று என்னிடம் கூறினார். புகார்தாரர் என்னென்ன வழிமுறைகளில் பணம் திருப்பி கேட்டார் என்றால் பலமுறை கேட்டும் அவர் கொடுக்கவில்லை, வங்கியில் இன்னும் கடன் கொடுக்கவில்லை என்றும், இரண்டு மூன்று மாதங்களுக்கு பின்பு புகார்தாரரிடம் வாங்கிய கடனுக்காக காசோலை கொடுத்தார். காசோலையானது எதிரி எந்த தேதியில் கொடுத்தார் என்றால் காசோலையை கொடுத்ததை நான் பார்த்தேன், ஆனால் அதில் இருந்த தேதியை நான் பார்க்கவில்லை, எதிரி மே மாதத்தில் தான் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

புகார்தாரர் எந்த வங்கியில் காசோலையை சமர்பித்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எந்த வங்கி மற்றும் வங்கி கிளையில் காசோலையை கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எத்தனை நபர்களிடம் நான் எதிரிக்கு கடன் வாங்கி கொடுத்தேன் என்றால் 2 நபர்களிடம் கடன் வாங்கி கொடுத்தேன். சரண்யா மற்றும் புகார்தாரரிடம் இருந்து மட்டும் தான் நான் எதிரிக்கு பணம் பெற்றுக்கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரியினுடைய 16 காசோலைகள் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. குடியாத்தத்தில் நான் ரவுடி கும்பலை வைத்து எதிரியை கடத்தி சென்று அவரை மிரட்டி அவரிடம் இருந்து 16 காசோலைகளையும்,

ஏடிஎம் கார்டையும், கைகடிகாரம், மோதிரம் ஆகியவற்றை திருடிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மே மாதம் காசோலை கொடுத்திருந்தால் மட்டுமே அது இவ்வழக்கிற்கான காசோலை, வேறு மாதத்தில் கொடுத்த காசோலையாக இருந்தால் அது இவ்வழக்கிற்கான காசோலை அல்ல என்றால் சரிதான். காசோலையில் 11.08.2022ம் தேதி என்று குறிப்பிட்டிருந்தால் அது இவ்வழக்கிற்கான காசோலை அல்ல என்றால் அதை குறித்து எனக்கு தெரியாது.

எதிரியினுடைய சம்பள பணத்தை பறிப்பதற்காக எதிரியை கடத்தி சென்று அவரிடம் இருந்து திருடி எடுத்து வந்த 16 காசோலைகளை கொண்டு தான் இவ்வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான வழியில் தவறான ஆதாயம் பெறுவதற்காகவும், எதிரியை மிரட்டி பணியவைப்பதற்காகவும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கட்டிய வீட்டை நான் சென்று பார்த்தேனா என்றால் வீடு சேலத்தில் கட்டி கொண்டு இருந்ததால் நான் பார்க்கவில்லை. எதிரி வீடும் கட்டவில்லை, அதற்காக கடனும் வாங்கவில்லை, காசோலையும் அவர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி கால்நடை மருத்துவதுறையில் பணியாற்றுவதால் எதிரி யாரிடமும் கடன் வாங்க அவசியமில்லை என்றால் சரியல்ல. எதிரியின் வருமானம் எவ்வளவு என தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் மூவரும் சேர்ந்து எதிரி மீது தவறான வழக்கை தாக்கல் செய்து அலக்கழித்து கொண்டிருக்கிறோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பாபு

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.